31st March 1969]

திரு. டி. கே. சுப்பையா : மாவட்டக் கலெக்டர்கள் இதுபற்றி முடிவு செய்தபின்பு அந்த முடிவை பகிரங்கமாக விவசாயிகளுக்கு பத்திரிகை வாயிலாக அறிவிக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : விளைச்சலுக்கு ஏற்ப முடி வெடுப்பார்கள். சாகுபடி கொஞ்சம் குறைவாக இருக்கிற நேரத்தில் கொள்முதலைக் கொஞ்சம் தளர்த்திக்கொடுப்பார்கள். கூடுதலாக விளை யும்போது கூடுதலாகக் கேட்பார்கள். குறிப்பிட்ட அளவு என்று நோட்டீஸ் கொடுத்தால், மகசூல் குறையும்போது, அதிகமாகக் கேட்கிறார்கள் என்று குறை சொல்லும் நிலை வரும். அதனால், மாவட்ட கலெக்டர்கள் அவ்வப் போது நிலைமைக்கேற்ப கொள்முதல் ஏற்பாடு செய்வார்கள்.

திரு. டி. கே. சுப்பையா : உற்பத்தியாகிற அளவுக்கு ஒரு முடிவு எடுத்து விட்டால் நன்றாக இருக்கும். அடிக்கடி விவசாயிகளுக்கு வருகின்ற அறிவிப்புகள் மாறுகின்றன. அது தெரியவில்லை. எட்டு மூட்டை என்றுஅறிவித்திருந்தால் உடனே 12 மூட்டை என்று நோட்டீஸ் வருகிறது. ஆகையால் அதைப் பரிசீலனை செய்து அவ்வப்போது எடுக்கின்ற முடிவைப் பகிரங்கப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அவ்வப்போது ஒவ்வொரு பகுதியிலும் வெவ்வேறு நிலைமைகள் ஏற்படுகின்றன. குறிப்பிட்ட கிராமத்தில் ஒரே மாதிரியாக மிகுந்த விளைச்சல் இருந்தால் நோட்டீஸ் கொடுப்பதற்குச் சங்கடம் இருக்காது. ஒரே நேரத்தில் பல கிராமங்களில் நிலைமைகள் வேறுபடுகின்றன. பாசனக் குறைவு உள்ள இடங்கள் இருக்கின்றன. பாசன வசதியுள்ள இடங்களும் இருக்கின்றன. இரண்டுக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்று சொல்ல முடியாது. ஆகவே நோட்டீஸ் கொடுப்பது உதவியாக இருக்காது என்று நினைக்கிறேன்.

Gandhi Centenary Programme.

* 336. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the details of the Gandhi Centenary Programme of the State Government; and

(*b*) the progress so far made for its implementation?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : காந்தி நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட தமிழக அரசு ஒரு மாநிலக் குழுவை அமைத் திருக்கிறது. அக்குழு செயல்படுத்திய திட்டங்கள், செயல்படுத்தஇருக்கும் திட்டங்கள் ஆகியவற்றின் விவரப்பட்டியல் * மன்றத்தின் முன்வைக்கப்பட் டுள்ளது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்ட அறிக்கையில் திட்ட எண் 6 என்பதன் கீழ் மதுவிலக்கை அமுல் படுத்து வதைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் சமீபத்திய நிலையில் அதை மறு பரிசீலனை செய்வது போல அரசாங்கத்தின் கூற்றுகளிலிருந்து தெரிகிறது. ஆகையால் இது பற்றி அரசாங்கத்தின் தெளிவான கொள்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மறு பரிசீலனை செய்வதாகச் சொல்லவில்லை. மத்திய அரசு மாநில அரசினுடைய இந்த சேவையைப் பாராட்டி மானியம் தரவேண்டு மென்றுதான் குறிப்பிட்டோம்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : காந்தியடிகள் நூற்றாண்டு விழாவில் கல்வி, சுகாதாரம், போன்ற காரியங்களுக்கு இந்த அரசு பஞ்சாயத்து, பஞ்சாயத்து கூட்டு மன்றம் போன்றவைகளுக்கு ஓரளவு மானியம் கொடுத்து, அதைப்போன்ற சம பங்கு கிராமங்களிலிருந்து பெற்று, இப்படிப்பட்ட வேலைகளைச் செய்ய உத்தரவிடுமா ?

---

* Printed as Appendix III on pages 269–273

[31st March 1969

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஊராட்சி ஒன்றியங்களில் கிராமங்களுக்கான குடிநீர் வசதி போன்ற திட்டங்களை எல்லாம் நிறைவேற்றும் பணிகள் இந்த நூற்றாண்டு விழாவை யொட்டி நடைபெறுகிற காரியங்களாகும்.

திரு. டி. சந்தோஷம் : மகாத்மாஜி அவர்கள் சத்தியம் வளரப் பாடு பட்டார்கள். இப்போது மதுவிலக்கின் அடிப்படையில் அசத்தியம் பெருகி வருவதால் இந்த நூற்றாண்டுவிழாக் காலத்தில் அந்த மதுவிலக்கைப் பற்றி மறு பரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படியே மறுபரிசீலனை செய்வதாக இருந்தாலும் மகாத்மாவின் நூற்றாண்டு விழாக் காலம் அதற்குரிய காலமாக இருக்க வேண்டாமென்று அரசு கருதுகிறது.

Sale of Kerala and Orissa Government Lottery Tickets

* 337. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether the sales of Kerala and Orissa Government lottery tickets are banned in Tamil Nadu;

(*b*) if so, whether it has been brought to the notice of the Government that these lottery tickets are sold in Tamil Nadu in spite of the order; and

(*c*) if so, the action taken thereon?

கேரளா, ஒரிசா பரிசுச் சீட்டுகள் விற்பனை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) கேரளா, ஒரிசா பரிசுச் சீட்டுகள் தமிழகத்தில் விற்கப்படுவது தடை செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், இத்தடையை மீறி இப்பரிசுச் சீட்டுகள் தமிழகத்தில் விற்கப்படுவது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ?

(உ) ஆமெனில் அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ), அண்டு (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

Stock of Fertilisers

* 338. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) the value of the stock of fertilisers as on 1st January 1966 in (i) Government Godowns; and (ii) Co-operative Department Godowns;

(*b*) whether it is a fact that fertilisers have not been sold much due to the lack of interest on the part of the Co-operative Department in the sale of fertilisers; and

(*c*) whether the Government will take steps to make fertilisers available in plenty through private dealers?